சார்வரி ஹு தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2021

மலர்: 3
இதழ்: 10

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஶம்

MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com



இராப்பத்து சாற்றுமுறை

சார்வரி ஆடு தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2021

ஸ்ரீ:

மலர்: 3
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ R. ராகவன் | ஸ்ரீ அழிசூர் R. ராகவன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: M.K.S. Mohan Babu, Rajagopalan Madhavan, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

மார்கழி மாத ஸஞ்சிகையில் வேதாந்தவாரியன் நமக்கு அளிக்கும் 'ஸந்தேசம்':-

- மார் (அஹங்கார-மமகாரங்களை) கழிப்போம்;

- வடமொழியில் 'மார்க-சீர்ஷம்' (உயர்ந்த நல்வழி) ஆன ப்ரபத்தி மார்க்கத்தை கடைபிடித்து உஜ்ஜீவிப்போம், என்றோம்.

தாமதிக்காமல் நாமும் அதைக் கடைபிடிக்க ஆர்வமாக நின்ற நிலையில், பரம-காருணிகரான ஸ்வாமி தேசிகன், நம் ஸம்ப்ரதாய ஆசார்ய ச்ரேஷ்டர் ஒருவரை அனுப்பி அனுக்ரஹித்தார் – ஆம், ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி விசேஷண விசிஷ்டரான ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகனின் திருமயிலை விஜய-யாத்ரையைத் தான் குறிப்பிடுகிறோம். இதைத்தான் 'தம்கையில் வளைபோல் எம் ஆசிரியர் வாக்கு' எனக் குறிப்பிட்டாரோ! 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதை சிறிது மாற்றி, ஸ்வாமி தேசிகனின் க்ருபை கிட்டினால், 'தை பிறக்கும் முன்னரே வழி பிறக்கும்' என நிரூபித்துவிட்டதே!! ''யதா வ்ருக்ஷஸ்ய ஸம்புஷ்பிதஸ்ய தூராத் கந்தோ வாதி ...''. ஆஹா! எத்தனை ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீமதழகியசிங்கரின் திருவடியில் பரந்யாஸம் செய்து ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவித்துப் போந்தார்கள். ''தேசிக க்ருபாத் பரம் நாஸ்தி'' (இது பிரம குருவான ஸ்ரீநிவாஸன் / வேங்கடேச குரு / ஸ்ரீமதழகியசிங்கர், என தேசிக-த்ரயத்தையும் குறிக்கும்).

உத்ஸவங்களுக்கென்றே ஏற்பட்ட மாதம் மார்கழி என்றால் மிகையில்லை – 22 தினங்களான அத்யயன உத்ஸவமென்ன, நீராட்ட உத்ஸவமென்ன, ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருநக்ஷத்ரமென்ன, ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவம் என்ன – மாதம் 29 தேதிகள் மட்டுமே கொண்டதாக அமைந்தது ஒன்றுதான் குறை போலும் !

இம்மாத மலரில் இடம் பெறுபவை சிறப்புக் கட்டுரைகளுடன் கீழ்கண்ட உத்ஸவங்களின் ஒளிப்படங்கள்...

- ✓ பகல்பத்து உத்ஸவம்
- ✓ வைகுண்ட ஏகாதசி
- ✓ இராப்பத்து உத்ஸவம்
- ✓ ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கண்ணன் டோலை உத்ஸவம்
- ✓ ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்
- ✓ க்ருத்திகா பாராயணம் பூர்த்தி
- ✓ பல்லாண்டு தொடக்கம்
- ✓ தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்
- ✓ பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் சின்னாண்டவன் மங்களாசாஸனம்

கண்டு வாசித்து இன்புறுமின்!

Normalcy Restored In Good Measure

FROM THE DESK OF TRUSTEES

The Karthikai Month-end saw the beginning of the celebrations in the Devasthanam with the performance of the Gruhapravesam of Sri Venkatesa Theertham and Mangalasasanam of Srivan Satakopa Sri Ranganatha Yathindra Mahadesikan, the 46th Srimath Azhagiyasingar of Sri Ahobila Mutt.

During Margazhi, the annual Vaikunta Ekadasi festival was celebrated in the customary manner with devotees thronging the temple, adhering to the COVID -19 protocols. The Adhyayana Uthsavam, the 22-day long festival was also celebrated with fervour, the highlight of which was 'Thiruvadi Thouzhudhal'.

The Iraa Pathu Uthsavam was initiated by Srimath Azhagiyasingar on December 25. The Andal Neeratta Uthsavam was also celebrated as usual, with Thiruveethi Purappadu, with the permission of the authorities. This marked the first occasion a procession was taken out of temple since the COVID-forced lockdown came into effect.

Thiruppavai is synonymous with the month of Margazhi and this year also the Veda Parayana Sabha had organised Thiruppavai Upanyasam, as is the custom, but with a difference. There were quite a few budding Vidwans along with some seniors (11 in all) who shared the honours of providing the discourse. They were fittingly honoured by the Devasthanam and the Veda Parayana Sabha.

Earlier, Srimath Azhagiyasingar acceded to our request and offered Mangalasasanam in our temple on December 11. HH also graced the Devasthanam's new facility Sri Venkatesa Theertham with his presence. The Acharya also visited our temple again during the Iraapathu Uthsavam Thodakkam, on our request.

Thondaradipodi Azhwar Satriumurai and Sri Hanumath Jayanthi were also celebrated during the month. On the day of the Azhwar's Thirunakshatram, His Holiness Poundarikapuram Srimath Andavan Sri Srinivasa Gopala Mahadesikan (Paravakottai Chinnandavan) offered Mangalasasanam in our temple.

Our Devasthanam accorded special honour to HH Srimath Azhagiyasingar and HH Srimath Poundarikapuram Andavan and Sambhavana to them as well as their Kainkaryaparas.

As mentioned in the previous issue, Sri Venkatesa Theertham has been completed and will begin operations in the month of Thai. We thank all the donors (list in the back-inside wrapper) who have made the significant project a reality. ❊

ஸ்ரீ:

சார்வரி வருட தை மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயதாரர்
ஜனவரி / பிப்ரவரி	தை					
14.01.2021	1	ப்ரதமை (08.52)	வியாழன்	உத்தராடம்	உத்தராயண புண்யகாலம் – பொங்கல் பண்டிகை – தை மாதப்பிறப்பு – காலை – பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர், தேசிகன் உத்ஸவர் – திருமஞ்சனம் ஊர்கோல உத்ஸவம் மாலை – பெருமாள், ஆண்டாள் உள் புறப்பாடு	M/s. சுந்தரம் சாரிடீஸ்
15.01.2021	2	த்விதீயை	வெள்ளி	ச்ரவணம்	கனு உத்ஸவம் – பெருமாள், தாயார், ஆண்டாள் ஆஸ்தானம்,	ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா
16.01.2021	3	த்ருதியை	சனி	அவிட்டம்	கனு பரிவேட்டை	ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
17.01.2021	4	சதுர்த்தி	ஞாயிறு	சதயம்		
18.01.2021	5	பஞ்சமி	திங்கள்	பூரட்டாதி	திருமால்வடை.	
19.01.2021	6	ஷஷ்டி	செவ்வாய்	உத்தரட்டாதி	திருமால்வடை.	
20.01.2021	7	ஸப்தமி	புதன்	ரேவதி	திருமால்வடை.	
21.01.2021	8	அஷ்டமி	வியாழன்	அச்வினி	திருமால்வடை.	
22.01.2021	9	நவமி	வெள்ளி	பரணி	பெருமாள் தாயார் – மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை தாயார் யானை வாஹனம் உள்புறப்பாடு	ஸ்ரீ M.V. ஸந்தானம்
23.01.2021	10	தசமி	சனி	க்ருத்திகை	கலியன்	
24.01.2021	11	ஏகாதசி	ஞாயிறு	ரோஹிணி	பெருமாள் உத்ஸவர் திருமஞ் சனம் – வீதிபுறப்பாடு.	ஸ்ரீ V.R. ஸ்ரீநிவாஸன்
25.01.2021	12	த்வாதசி	திங்கள்	ம்ருகசீர்ஷம்	திருக்கச்சிநம்பிகள்	
26.01.2021	13	த்ரயோதசி	செவ்வாய்	திருவாதிரை	ஸ்ரீ பாஷ்யகாரர்	
27.01.2021	14	சதுர்தசி	புதன்	புனர்வஸு	ஸ்ரீராமர் திருமஞ்சனம் மாலை – ஆஸ்தானம், ஸேவாகாலம்	
28.01.2021	15	பௌர்ணமி	வியாழன்	புஷ்யம்	தை புஷ்யம். பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை – பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு	ஸ்ரீ வேதபாராயண ஸபா
29.01.2021	16	ப்ரதமை	வெள்ளி	ஆயில்யம்	காலை – பெருமாள், தாயார் – மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். – மாலை – தாயார் கிளி வாஹனம் உள் புறப்பாடு	ஸ்ரீ G. ரங்கராஜன்

30.01.2021	17	த்வீதியை	சனி	மகம்	திருமழிசையாழ்வார் சாற்றுமுறை. பெருமாள், ஆழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம் சாற்றுமுறை.	அழிசூர் ஸ்ரீ வீரராகவன் - ஸ்ரீ A.V. ராமன்
31.01.2021	18	த்ருதியை	ஞாயிறு	பூரம்	ஆண்டாள்.	
01.02.2021	19	சதுர்த்தி	திங்கள்	உத்தரம்	தாயார் திருமஞ்சனம். உள்புறப்பாடு	ஸ்ரீ S.V.S. ராகவன் பண்ட்
02.02.2021	20	பஞ்சமி	செவ்வாய்	ஹஸ்தம்	கூரத்தாழ்வான் சாற்றுமுறை - பெருமாள், ஆழ்வார் திருமஞ் சனம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ P.V. ராகவன் பண்ட்
03.02.2021	21	ஷஷ்டி	புதன்	சித்திரை	மதுரகவிகள்	
04.02.2021	22	ஸப்தமி	வியாழன்	ஸ்வாதி	ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மர் ஆஸ்தானம்	
05.02.2021	23	அஷ்டமி	வெள்ளி	விசாகம்	காலை - பெருமாள், தாயார் - மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். - மாலை - தாயார் தங்கக்கேடயம் உள் புறப்பாடு	ஸ்ரீ S. சுந்தரம்
06.02.2021	24	நவமி	சனி	அநுஷம்	ஸ்ரீமந்நாதமுனிகள்	
07.02.2021	25	தசமி / ஏகாதசி	ஞாயிறு	கேட்டை	தொண்டரடிப்பொடிகள்	
08.02.2021	26	த்வாதசி (52.28)	திங்கள்	மூலம்	கோயில் ஏகாதசி - பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் - வீதிபுறப்பாடு	ஸ்ரீ M.K. ஸ்ரீதரன்
09.02.2021	27	த்ரயோதசி (49.15)	செவ்வாய்	பூராடம்	ஸேனைநாதன்	
10.02.2021	28	சதுர்தசி	புதன்	உத்தராடம்	ஸ்ரீஆளவந்தார்	
11.02.2021	29	அமாவாசை	வியாழன்	ச்ரவணம்	காலை - பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை - பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு	அமாவாசை - ஸ்ரீ S. நாராயணன்; ச்ரவணம் - ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்
12.02.2021	30	ப்ரதமை	வெள்ளி	அவிட்டம்	மாதப்பிறப்பு - காலை - பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம் - மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு; பின்பு தாயார் உள்புறப்பாடு	மாதப்பிறப்பு - ஸ்ரீ ராமகிருஷ்ண கனபாடிகள் - ஸ்ரீ N.R.S.ஸ்ரீராமன்; வெள்ளிகிழமை - ஸ்ரீ V. சேஷாத்ரி

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

அருளிச்செயலில் பாகவதர்களின் பெருமை - 2

நாவகாரியம் - பெரியாழ்வார் திருமொழி (தொடர்ச்சி)

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

சென்ற இதழில் 'நாவகாரியம்' என்ற பதிகத்தின் முதல் ஐந்து பாசுரங்களை அநுபவித்தோம். இனி...

6. பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து புலன்களைந்து பொறிகளால் ★
ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள் வாழ்த்திருகோட்டியூர் ★
நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்கள் உழக்கிய ★
பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே.

அவைஷ்ணவர்களுக்குப் போலே, ஸம்ஸாரியாய் இரும்கும் போது, சரீரம், இந்த்ரியம், விஷயம் மற்றும் வைதிக வ்யாபாரங்கள் எல்லாம் இருந்தே தீரும். ஆகிலும் அவற்றைச் சரியான முறையிலே, அவைகளைஸ்ருஷ்டித்தஎம்பெருமான்திருவுள்ளப்படி உபயோகப்படுத்து குற்றமாகாது. மேலும், மோக்ஷத்திற்காக அன்றி, வேறு பலன்களுக்காக அவற்றை உபயோகித்தால் குற்றமுண்டு.

பகவானைப் போல அல்லது அதற்கு மேலாகவும் பாகவதர்களை ஆராதிக்கவேண்டியது அவச்யமாகையாலே, அது விஷயத்தில் மேற்சொன்ன வ்யாபாரங்களை உபயோகியாமல் இருப்பதும் குற்றமாம். இங்கு வேறு பலன்களைக் கோராமலிருத்தல் என்பது, தேவதாந்தரங்களைக் குறித்தும், தேவதாந்தர பக்தர்களுக்காகவும் இவைகளைப் பயன்படுத்துவதில்லை என்பது. அதிலும் குறிப்பாக நித்யநைமித்திகங்களை அனுஷ்டிக்கும் போது, தேவதாந்தரங்களை குறிக்கும் வைதிக பதங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல்வது அவசியமாகிறது. ஆகிலும், ஸர்வாந்தர்யாமியான ச்ரிய: பதியையே அப்பதங்களின் பொருளாகக் கொள்வதே ப்ராமாணிகமாகையால், அவற்றால் தேவாதாந்தரங்களை இவர்கள் ஆராதித்ததாகாது. சிலர் தேவாதாந்தர ஸம்பந்தம் ஏற்பட்டுவிடுமோ என்றஞ்சி, வேள்விகளை அனுஷ்டிக்காமல் விட்டொழிப்பர். இது ஆத்மஹத்தி செய்வதற்கு ஒப்பாகும்.

இப்படி, பஞ்ச மஹாபூதங்களாலும், பஞ்ச மஹா இந்த்ரியங்களாலும், சப்தம் முதலிய விஷயங்கள் மற்றும் ஐந்து இந்த்ரியங்கள் முதலியவற்றால் வரும் குற்றம் கொஞ்சமும் இல்லாதவர்களும், உதாரமான கைகளை உடையவர்களுமான, ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுமிடமான திருக்கோட்டியூருக்கு நாதனும், நரசிங்கனுமான எம்பொருமானை (அதாவது அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் சொக்க நாராயணரையும், தெக்காழ்வாரயும் குறிப்பதாகக் கொள்வர்) நன்கு உணர்ந்து ஸ்தோத்ரம் செய்பவர்கள் மிதிப்பால் கிளம்பிய திருவடிகளில் பட்ட துகள்கள் ஸம்பந்திப்பதால் இந்த லோகமானது ஸூக்ருதத்தைப் பண்ணிற்று என்றருள்கிறார் ஆழ்வார், இதையே, ''நிர்த்நாந் சரதோ லோகே வ்ருத்யர்த்தமிஹ ஸாத்விகாந். நாவமந்யேத தைர்லோகம் பவித்ரீ குருதே ஹரி: யே பாவயந்தி தரணீம் சரணை ; பாஞ்ச காலிகா: தர்சநாத் ஸ்பர்சநாத் தேஷாம் க்ருதார்த்தா; ஸர்வதேஹிந:'' என்று ஸ்ரீசாண்டில்ய ஸ்ம்ருதியும், ''ஜயந்தி புவநத்ராண பதபங்கஜ ரேணவ:'' என்று ஸ்வாமி தேசிகனும் ஸாதித்தபடி.

இப்பாசுரத்தில், ஆழ்வார் ஆஜ்ஞாகைங்கர்யம் செய்வதைக்கொண்டு, திருக்கோட்டியூரில் உள்ளவர்களைத் துதித்து, பாகவதப்ராவண்யத்தை உபதேசித்தருளினார்.

7. குருந்தமொன்றொசித்தானொடும் சென்று கூடியாடி விழாச்செய்து ★
திருந்து நான்மறையோர் இராப்பகல் ஏத்திவாழ் திருக்கோட்டியூர் ★
கருந்தட முகில்வண்ணனைக் கடைக்கொண்டு கைதொழும்
பத்தர்கள் ★
இருந்தவூரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார்கொலோ.

முன் பாசுரத்தில் சொன்னபடி, பஞ்சமஹாயஜ்ஞாதி நித்யகர்மானுஷ்டானத்தோடு நின்று விடாமல், ''மத்கர்மக்ருத் மத் பரம:'' என்றபடி, அநுஜ்ஞாகைங்கர்யத்திலும் ஈடுபட்ட பிறகே, ஒருவன் செவ்வைப்படுகிறான் என்கிறது இப்பாசுரம்.

''சாயக்குருந்தம் ஒசித்த தமியற்கு'' என நம்மாழ்வார் அருளிச்செய்த படிக்கு, அசுரன் புகுந்த ஒரு குருந்த மரத்தை முறித்தவனான கண்ணபிரானோடு, அநுயாத்திரையாகச் சென்று குழாங்களாகச் சேர்ந்து அவனது அனுபவதில் ஈடுபட்டுக் கூத்தாடியும், உத்ஸவத்தை நடத்தியும், செவ்வைப்படுகின்ற நான்கு வேதங்களையும் ஓதினவர்கள், இரவும் பகலும் கண்ணனைத் துதித்து ஆத்மதாரணம் செய்யுமிடமான, கோஷ்டீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் கறுத்தும், பருத்தும் மேகத்தின் ஸ்வபாவமுள்ள எம்பிரானை, த்ருடமான அத்யவஸாயத்துடன் அஞ்சலி செய்து நிற்கும் பக்தர்கள் வஸித்து வரும் இந்த ஸ்ரீக்ராமத்திலே வாஸம் செய்யும் மனிதர்கள், எவ்விதமான தபஸ்ஸூக்களை செய்திருப்பார்கள் என்று முதலில் ஆராயவேண்டும் என்கிறார் ஆழ்வார்.

இங்கு ''திருந்து'' என்கிற பதத்தை நான்மறைக்கு விசேஷணமாக்கி, மறைக்குத் திருத்தமாவது, பகவத் ஸ்வரூபாதிகளை உள்ளபடி உரைத்து, அவற்றை விசதமாகச் சொல்லும் வேத பாகங்களைப் பாராயணம் செய்து, அர்த்தாநுஸந்தானம் செய்வதைக்

குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. நான்மறையோறென்றது, தாங்கள் கற்ற மறைகளை விழாவில் உபயோகிக்கின்றமையைக் குறிப்பதாகும்.

''கடைக்கொண்டு'' என்பது, உறுதியாகக் கொள்வது என்பது பொருள். அதாவது, பலாந்தர தேவதாந்தரங்களை விட்டு அவனையே ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் அத்யவஸித்தைச் சொல்வதாகும். இக்கொள்கை கடையானது. ஒருக்காலும் மாறாதது. ஒருவருக்கு நைச்யத்தை அநுஸந்திப்பது எனவும் பொருள் கொள்ளவேண்டும், அதாவது, பகவத்தாஸ்யத்தின் எல்லை நிலமான பாகவததாஸ்யத்தையும் கொண்டு, அதற்கு விரோதமின்றியே என்றும் பொருள் கொள்ளலாம்.

''தவங்கள்'' என்பது, வெறுமனே திருக்கோட்டியூரில் இருப்பது, அதனால் அவ்வூரில் இருக்கும் பாகவதர்களின் தர்சனம் கிடைப்பது. அதனால், ஒருக்கால் அப்படிப்பட்ட பாகவதர்களிடத்தில் செல்ல நேருவது, காலக்ரமத்தால் அப்படிப்பட்ட பாகவதர்களால் திருத்தம் பெறுவது.

8. நளிர்ந்தசீலன் நயாசலன் அபிமானதுங்கனை, நாள்தொறும் ★
தெளிந்த செல்வனைச் சேவகம் கொண்ட செங்கண்மால்
திருகோட்டியூர் ★
குளிர்துறைகின்ற கோவிந்தன் குணம்பாடுவார்
உள்ள நாட்டினுள் ★
விளைந்த தானியமும் இராக்கதர்மீது கொள்ளகிலார்களே.

இப்பாசுரத்தில், திருக்கோஷ்டியூரிலுள்ள பாகவதர்களுக்குள் முதல்வராயும், தம் காலத்திலே எழுந்தருளியி இருந்தவரும், பாண்டிய அரசனையும், ப்ரஜைகளையும் பரவாஸுதேவனுக்கு ஆளாக்கினவருமான செல்வநம்பி என்னும் மஹாபாகவதரைக் கொண்டு அவ்வூரைத் துதித்து அடியார்களின் பெருமையை அருள்கிறார் ஆழ்வார்.

திருப்பல்லாண்டிலேயே ''அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன், அபிமான துங்கன் செல்வனைப் போலத் திருமலே நானுமுனக்குப் பழவடியேன்'' என்று இந்த செல்வநம்பியை ஆழ்வார் புகழ்ந்துள்ளார். இப்படிப்பட்ட குளிர்ந்த ஸ்வபாவமுடையவரும், நீதிநெறிதவறாது (நயாசலன் அல்லது நயவசலன்) நடக்கும்படி பாண்டியனுக்கு ஆஜ்ஞையிட்டு சிக்ஷிக்கவேண்டியவரை சிக்ஷைக்கு உட்படுத்துகிறவரும், பிறர்செய்யும் அபிமானத்தாலே உயர்ந்தவரும், தினந்தோறும் தெளிவுபெற்ற கைங்கர்யமாம் செல்வத்தைப் பெற்ற நம்பியை கைங்கர்யம் செய்பவனாக ஸ்வீகரித்தவனும், செந்தாமரைக் கண்ணனும், ஆச்ரிதர்களிட்த்தில் மோஹம் கொண்டவனும், திருக்கோட்டியூரை உகந்து நித்யவாஸம் செய்பவனுமான கோவிந்தனுடைய திவ்ய குணங்களைப் பாடுகின்றவர்கள் வஸிக்கும் க்ராமத்தில், அவர்களுக்குச் சொந்தமான வயல்வெளிகளிலே உள்ள தானியங்களைக்கூட ராக்ஷஸர்கள் அபஹரிக்கமாட்டார்கள் என்கிறார் ஆழ்வார்.

வயல்வெளிகளில் யாரும் பாராதபோது, இராக்காலத்திலே ராக்ஷஸர்கள் தானியங்களை (கதாகதம்) அபஹரிப்பார்கள் என்பது பொதுவானது. அதனால் இவர்கள் இராக்கதர் எனப் பெயர்பெற்றனர். ஆனால் திருகோட்டியூரில் அவர்களால் ஒன்றும் செய்யவியலாது. காரணம், அந்தத் தானியங்களைத் தீண்டின மாத்திரத்திலே அவர்கள் உருமாய்ந்துவிடும்படி அவற்றிற்குப் பெருமையுண்டு. அவ்வூரிலுள்ள ராக்ஷஸர்களுக்குத் தெய்வபக்தி உண்டாகையாலே, அவ்வூர்ப் பெரியோர்கள் பிறர்களுக்கென்று யிரிடும் தானியங்களை நாம் கொள்ளலாகது என்ற நல்லபுத்தி அப்போது அவர்களுக்கு உண்டாகுமாம் என்பது சிறப்பு, மேலும், இத்திருமொழியின் பத்தாம் பாசுரத்தில் சொல்லப்பட்டபடி, பாகவதர்கள் ''கரவாது மாற்றிலி சோறிடுவதால்'', தானியங்களைக் கொள்ளை கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்பதும் இங்கு கூறப்படுகிறது,

No Brahmothsavam for Saarvari year

There had been contemplation as regards conduct of Saarvari year's Brahmothsavam which normally takes place in Vaikasi (May-June), but could not be held this year for the reasons of COVID-19 restrictions.

Though there are some relaxations at present, considering the overall situation and to avoid any explanations with reference to contravention of regulations in force and after taking into consideration the opinion expressed in the book titled '**ஆலய ப்ராயச்சித்த விதி: - 2**' authored by Sri U.Ve.T. Srinivasachariar, Mylapore, it has been decided to forego conduct of the Brahmothsavam for the Saarvari year.

The averment as it appears in Tamil in Page 24 of the above book is reproduced below for convenience of understanding.

8. மஹோத்ஸவ விஷயம்

வருஷ முடிவுக்குள்ளும் பண்ணமுடியாவிட்டால், ஸஹஸ்ர கலசாபிஷேகமும், சாந்தி ஹோமமும், மூலமந்த்ர (1008) ஜபமும், ஸஹஸ்ர ப்ராஹ்மண போஜநமும் பண்ணிவைக்கவும். இதுவே சாந்தியாகும். நின்ற உத்ஸவங்களைச் செய்ய வேண்டாம்.

Hence, Prayaschitham (atonement) as recommended will be performed in due course.

- Trustees

9. கொம்பினார் பொழில்வாய்க் குயிலினம் கோவிந்தன்
குணம்பாடுசீர் ★
செம்பொனார் மதிள்சூழ் செழுங்கழனியுடைத் திருகோட்டியூர் ★
நம்பனை நரசிங்கனை நவின்றேத்துவார்களைக் கண்டக்கால் ★
எம்பிரான்தன சின்னங்கள் இவரிவறென்று ஆசைகள் தீர்வனே.

கிளைகள் நிறைந்த சோலைகளிலே, குயில்களின் கூட்டத்தின் கோவிந்தனுடைய குணங்களைப் பாடும் இரைச்சலை உடையதும், சுத்தமான பொன்னாலான மதிள்சுவர்களாலே சூழப்பெற்றதும், செழுமை உள்ள வயல்களை உடையதுமான, திருக்கோட்டியூரின் கடவுளான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை அநுஸந்தித்துத் துதிப்போர்களை தரிசனம் செய்வேனாகில், இவர்களெல்லாரும் எம்பருமானுடையவைகளான லக்ஷணங்கள் என்று நினைத்துத் தனது மநோரதங்களைப் பூர்த்தி செய்து கொள்வதாக ஆழ்வார் இப்பாசுரத்தில் அநுஸந்திக்கின்றார்.

''எம்பிரான் தன் சின்னங்களாவன'' – அவனுடைய கல்யாண குணங்கள், அவனுடைய பரிஜன பரிச்சதங்களான, அநந்த, கருட, விஷ்வக்ஸேந, சங்க, சக்ர, கௌஸ்துபாதிகள். இவைகள், எம்பெருமானின் லக்ஷணமாக, அவனைவிட்டு ஒருபொழுதும் அகலமாட்டா. இப்படிப்பட்ட எம்பெருமானின் சின்னங்களாக பாகவதர்கள் இப்பாசுரத்தில் குறிப்பிடப்படுவது விசேஷமாகும்.

10. காசின்வாயி கரம்விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டு ★
தேசவார்த்தை படைக்கும் வண்கையினார்கள்
வாழ்திருகோட்டியூர் ★
கேசவா புருடோத்தமா கிளர்சோதியாய் குறளா என்று ★
பேசுவார் அடியார்கள் எம்தம்மை விற்கவும் பெறுவார்களே.

ஒரு பொன் காசு பெறுவதிலே, ஒரு கை தானியம் விற்கும் காலத்திலும் கூட, மறைக்காமல், வஞ்சனையின்றி, வேறுபாடின்றி, எல்லோரும் எம்பெருமானின் விபூதியென்று தெளிந்து, தயை மிகுந்து, ப்ரத்யுபகாரம் இல்லாத அன்னத்தைப் பசித்தவர்களுக்கெல்லாம் அளித்து, அத்தேசத்திற்குரிய ஹிதமான வார்த்தைகளைப் பேசி, உதாரமான கைகளையுடைய பெரியோர்கள் வாழுமிடமான கோஷ்டீபுரத்தில எழுந்தருளியிருக்கும் ப்ரம்ம, ருத்ராதிபதியே என்றும், ''உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதஹ்ருத: யோ லோகத்ரயமாவிச்ய பிபர்தவ்ய ஈச்வர:'' என்றபடி ஷாட்குண்யம் நிரம்பிய புருஷோத்தமனே என்றும், பரம்பதநாதனாய், அப்ராக்ருத திவ்யரூபனாக ஓங்கி நிற்கும் ஜ்யோதிஸ்ஸை உடையவனே என்றவாறும் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருக்கும் தாஸர்கள், நம்மை பிறர்க்கு விலைக்கு விற்பதற்கும் அதிகாரம் பெற்றிருப்பவர்கள் என்றருளி, அவதார ரூபங்களை குறளா என்கிறார் ஆழ்வார்.

''விற்கவும் பெறுவார்கள்'' – ''ஹரிபக்த தாஸ்ய ரஸிகா: பரஸ்பரம் க்ரயவிக்ரயார்ஹ தசயா ஸமிந்ததே'' என்று ஸ்வாமி தேசிகனும் இதனை அருளிச்செய்கிறார். அதாவது, தாங்கள் செய்யும் பகவத், பாகவத கைங்கர்யத்திற்கு த்ரவ்யம் வேண்டியிருந்து, தம்மைச் சில பாகவதர்கள் விற்பதும், தங்களுக்கு அவ்வித கைங்கர்யங்களைக் கூட இருந்து நடத்த வேலைக்காரர் வேண்டியிருந்து, சிலர் வாங்குவதுமுண்டு.. வேலை செய்வது மாத்திரம் கூலிக்கு வேலையாக ஆகாதபடி, புருஷார்த்தமென்று பேரவாவில் பிறந்ததாக வேண்டும். விற்கவும் பெறுவார்களென்பதற்கு, தங்களுக்கு ஸஹாயமாகவும் பெறுவார்கள் ; விற்கவும் பெறுவார்கள் எனவும், சிலர் விற்க, சிலர் பெறுவார்கள் எனவும், இது பகவத் சேஷத்வத்திற்குப் பராகாஷ்டை என கூறப்படுகிறது.

இத்திருமொழியில், முதல் ஐந்து பாசுரங்களிலே அடிமையற்றவரையும், பின் ஐந்து பாசுரங்களிலே அடியார்களான பாகவதர்களையும் பிரித்துக் கூறி, கீழ்வரும் பாசுரத்தில், இத்திருமொழியின் பலனை அருள்கிறார் பெரியாழ்வார்.

11. சீதநீர் புடைசூழ் செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர் ★
ஆதியான் அடியாரையும் அடிமையின்றித் திரிவாரையும் ★
கோதில் பட்டர்பிரான் குளிர்புதுவைமன் விட்டுணுசித்தன் சொல் ★
ஏதமின்றி உரைப்பவர் இருடீகேசனுக்காளரே.

இப்பாசுரத்தில், கோஷ்டீபுரம் என்னும் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் பரமகாரணனான எம்பெருமானுக்கு தாஸராயிருப்பவரையும், அந்த தாஸ்யம் பெறாமலே திரிகின்றவரையும் பற்றிய, குற்றமற்றவராயும் குளிர்ந்த ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகனுமான, விஷ்ணு சித்தரான தம்முடைய இத்திருமொழியை குறைவில்லாமல் ஓதுகின்றவர், அந்த ஹ்ருஷீகேசனான எம்பெருமானுக்கு தாஸர்களாவர், என்று அறிவித்து இத்திருமொழியைத் தலைக்கட்டுகிறார்.

பாகவதர்களின் பெருமை மேலும் வளரும்...

தை மாதத்தில் முக்கிய உத்ஸவங்கள்
தை வருஷப்பிறப்பு, ஸங்க்ராந்தி உத்ஸவம் ஜனவரி 14 (வியாழன்)
கனு உத்ஸவம் – ஆஸ்தானம் ஜனவரி 15 (வெள்ளி)
தை - புஷ்யம் உத்ஸவம் ஜனவரி 28 (வியாழன்)
திருமழிசை ஆழ்வார் சாற்றுமுறை ஜனவரி 30 (சனி)
கூரத்தாழ்வான் சாற்றுமுறை பிப்ரவரி 2 (செவ்வாய்)

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

பகல்பத்து உத்ஸவம்

வைகுண்ட ஏகாதசி

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

வைகுண்ட ஏகாதசி

ஸ்ரீ:

இராப்பத்து உத்ஸவம்

இராப்பத்து உத்ஸவம்

இராப்பத்து உத்ஸவம்



ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கண்ணன் டோலை உத்ஸவம்

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கண்ணன் டோலை உத்ஸவம்

ஸ்ரீ:

கண்ணுக்கினியன

ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்

க்ருத்திகா பாராயணம் பூர்த்தி

பல்லாண்டு தொடக்கம் - பெரியாழ்வார்

தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்

பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் சின்னாண்டவன் மங்களாசாஸனம்

கண்ணுக்கினியன

பௌண்டரீகபுரம் ஸ்ரீமத் சின்னாண்டவன் மங்களாசாஸனம்

ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம் பொன்னடி

ஸ்ரீ:

ஒலிகள் சொல்லும் செய்திகள்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்... என்பதாக ஸாதுக்களை ரக்ஷணம் செய்வதற்காக மீனாய் ஆமையாய் எனப் பல பிறவிகளை எடுக்கும் ஸௌலப்யத்தை உடையவன் எம்பெருமான். இப்படி பூமியில் வந்து அவதாரம் செய்யும் காலங்களில் பரமபதநாதனான இவன் தன் திவ்ய திருமேனி, திவ்ய ஆபரணங்கள் மற்றும் திவ்ய ஆயுதங்களுடன் தோன்றுகிறான். ஆயுதங்களும் அவனுக்கு ஆபரணங்கள் போன்றே என்று நினைப்பவர்கள் நித்யஸூரிகள். ஏனெனில் அங்கு பரமபதத்தில் ஆயுதங்களின் அவச்யம் இல்லையே! ஆழ்வார்களும் ஆயுதங்களையே பகவானுக்கு ஆபரணங்களாக எண்ணி அவன் அழகில் ஈடுபடுகின்றனர். ஸம்ஸாரிகளோவெனில் எம்பெருமான் ஆயுதங்களை தரிப்பது சத்ருக்களை வெல்வதற்கு என்று நினைத்திருப்பர். அவ்வாறின்றி ஆயுதங்களை நம்மை ரக்ஷிப்பதற்காகவன்றோ அவன் ஏந்துகின்றான் என்பர் ஆன்றோர்!

'சன்மம் பல பல செய்து வெளிபட்டுச் சங்கொடு சக்கரம் வில்
ஒண்மை உடைய உலக்கை ஒள்வாள் தண்டு கொண்டு புள்ளூர்ந்து
உலகில் வன்மையுடைய அரக்கர் அசுரரை மாளப் படைபொருத
நன்மையுடையவன் சீர் பரவப் பெற்ற நானோர் குறைவிலனே.'

என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி எம்பெருமான் ஆயுதங்களை தாங்கியவனாய் வலிய அரக்கர்கள், அசுரர்களை அழிக்கின்றான். இவ்வளவன்றி ஆயுதம் ஒன்றுமின்றியே ஆச்ரிதர்களை ரக்ஷித்ததும் உண்டன்றோ?

பக்தனாகிய ப்ரஹ்லாதனின் வாக்கைக் காப்பாற்று வதற்காக நகங்களையே ஆயுதமாகக் கொண்டு ஹிரண்யகசிபுவை வதம் செய்தான். எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து இங்கில்லையால் என்று இரணியன் தூண் புடைப்ப அங்கு அப்பொழுதே ந்ருஸிம்ஹன் ஆவிர்பவித்தான்!

ஒலியும் ஒரு ஆயுதமே!

திசைதிறந்து அண்டம் கீறச் சிரித்தது அச் செங்கண்சீயம்' என்கிறார் கம்பர். அங்கண் ஞாலம் அஞ்ச அதிரச் செய்தது அந்த ஒலி. அவ்வொலியினால் எங்கும் நிறைந்து நின்றான் பரமாத்மா! வேதமே ஸ்வரூபமான எம்பெருமான் சப்தத்தினால் எங்கும் பரவி நின்றான். இதைக் கண்ட பக்தனான ப்ரஹ்லாதன் மகிழ்ந்தான். தலையில் கை குவித்து, தொழுதான், ஆடிப் பாடினான்.

ஒலிக்குப் பாரிப்பது எல்லோருக்கும் இயல்பு. அவரவர் எதிர்பார்ப்புக்கு ஏற்றதாகயிருக்கும் அவர்கள்

கேட்க ஆசைபடும் ஒலி! இக்கருத்தினை ஒரு சில மணியான வ்ருத்தாந்தங்களைக் கொண்டு இங்கு அனுபவிப்போம்.

ஸ்வாமி நம்மாழ்வாரின் ஆற்றாமை:

'கண்களாற் காணவருங்கொல்! என்று ஆசையால்
மண்கொண்ட வாமனன் ஏற மகிழ்ந்து செல்
பண்கொண்ட புள்ளின் சிறகொலி பாவித்து
திண்கொள் வோர்க்கும் கிடந்தென் செவிகளே.'

எம்பெருமான் அடியார்களை தானே அவர்களிருக்கும் இடம் சென்று காக்கும் அருளை இயல்பாக உடையவன், அவ்வாறு அவன் பெரிய திருவடியின் மீதேறி வரும் சமயம் **கருடனின் சிறகின் இனிய ஒலியைக்** கேட்க வேண்டுமென்று தம் செவிகள் விரும்புவதாகவும், எம்பெருமான் வரும் ஒலியைக் கேட்க வேண்டுமென்றும் விரும்புகின்றன என்றும் அருளிச்செய்துள்ளார் இப்பாசுரத்தில்.

நந்திக்ராமத்தில் பரதனின் நிலை: ஸ்ரீ ராமன் வனவாசம் சென்ற பிறகு, பரதன் பதிநான்கு ஆண்டுகள் அயோத்தியில் ப்ரவேசிக்காமல், பாதுகைகளை ப்ரதிநிதியாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். புலன்களை அடக்கி ஓர் முற்றும் துறந்த முனிவனைப் போன்று வாழ்ந்து வந்தவன், தென்திசை மட்டுமே நோக்கி, ராமனின் வரவை எதிர்பார்த்து இருந்தான். ராமன் கூறிய காலத்தில் வரவில்லையென்றால் அக்னியில் உயிரை மாய்த்துக் கொள்வதாக உறுதி பூண்டு இருந்தான். இந்நிலையில் தான் சக்கரவர்த்தி

திருமகன், சீதை, விபீஷணன் மற்றும் வானர கூட்டத்தையும் ஏற்றி வரும் **புஷ்பக விமானத்தின் ஓசையும்,** வானரக் கூட்டத்தின் ஆரவாரத்தையும் எதிர் நோக்கி இருந்தான். அவ்வொலி கேட்ட தருணத்தில் தான் பரதன் மீண்டும் உயிர் பெற்றான்

சுக்ரீவனிடம் இளைய பெருமாளின் சீற்றம்: குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னரும் சுக்ரீவன் ஸ்ரீ ராமனுக்கு கொடுத்த வாக்குப்படி சீதையை தேடும் பணியை தொடங்காமல் போகத்தில் மயங்கி இருந்தான். இதனால் கோபம் கொண்டனர் ராம லக்ஷ்மணர். ஸ்ரீ ராமனின் ஆணையை ஏற்று சுக்ரீவனுக்கு எச்சரிக்கை விடுப்பதற்காக லக்ஷ்மணன் சீற்றத்தோடு கிஷ்கிந்தை வந்தடைந்தவன், தன் வில்லின் **நாணொலி** எழுப்பினான். அவ்வொலியே அனைவரையும் நடுங்க வைத்தது என்பது சரித்ரம்.

ஸீதா பிராட்டியின் ஸமாதானம்: இராவணனாலும் அசோக வனத்தில் ராக்ஷஸிகளாலும் பலவாறாக துன்புறுத்தப்பட்ட சீதை இராமதூதனாக தன்னைத் தேடி வந்த சிறிய திருவடியிடம் தான் இன்னும் ஒரு மாத காலமே உயிர் தரித்திருப்பேன் என்றும் விரைவில் ஸ்ரீ ராமன் வந்து தன்னை மீட்டுச் செல்ல வேண்டும் என்று கூறி அனுப்பினாள். அதன் பிறகு ராமன் இலங்கை வந்தவுடன் **வில்லின் நாணோசை** எழுப்பினான். அந்த சார்ங்க வில் நாணோலி கேட்டு ஸீதை ஆச்வாசமடைந்தாள்.

ருக்மிணி பிராட்டியின் ஆனந்தம் : கண்ணாலம் கோடித்து கன்னி தன்னை கைப்பிடிப்பான் என்று சிசுபாலன் எண்ணியிருந்த அத்தருணத்தில், கண்ணன் அதிர புகுந்து எழுந்தருளினான். அக் கண்ணனையே மணாளனாக அடைய வேண்டும் என்று விரும்பிய ருக்மிணி பிராட்டி, குல வழக்குப்படி தேவி வழிபாட்டுக்கு சென்ற வேளையில் கண்ணன் பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய **சங்கொலியைக்** கேட்டு மிகவும் ஆனந்தப் பட்டாள் .

ஸ்ரீ ஆண்டாள்: 'எழிலுடைய அம்மனைமீர் என்னரங்கத்தின்னமுதர்' என்று அவ்வரங்கனையே கண்ணன் என்னும் கருந்தெய்வமாக பாவித்து, மானிடவர்க்கென்று பேச்சுபடில் வாழகில்லேன் என்று அரங்கனையே தன் மணாளனாக கொள்ளும் நிலைப்பாட்டில் ருக்மிணி பிராட்டியைப் போன்று உறுதியாக இருந்தாள். இந்நிலையில் '**பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும் சார்ங்கவில் நாணொலியும் தலைபெய்வது எஞ்ஞான்று கொலொ'** என்று வருந்துகிறாள்.

திருப்பாவையில் ஆண்டாள் காட்டித் தந்த சில விசேஷ த்வனிகள்:

ப்ராத: காலத்தில் மங்களமான சில த்வனிகளைக் கேட்க வேண்டும் என்பதாகச் சாஸ்த்ரம் கூறுகிறது.

வேத கோஷம், பக்ஷிகளின் சப்தம், தயிர் கடையும் ஓசை, கருட த்வனி, சங்க நாதம் என்பது போன்ற ஒலிகள். இதை நமக்கு ஆண்டாள் தமது பாசுரங்கள் மூலம், அரியென்ற பேரரவம், புள்ளும் சிலம்பின காண், வெள்ளை விளி சங்கின் பேரரவம், ஆனைச்சாத்தான் கலந்து பேசின பேச்சரவம், மத்தினால் ஓசைப்படுத்த தயிரரவம் என்றெல்லாம் அழகாக உணர்த்துகிறாள்.

மேலும் பாஞ்சஜன்யம் என்னும் எம்பெருமானின் சங்கின் பெருமையை சொல்லாழி வெண் சங்கே என்றும், **வலம்புரி போல் நின்றதிர்ந்து, ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன** என்று பலவாறாக அருளிச்செய்துள்ளாள். பாஞ்சஜன்யம் எனும் திருச்சங்கம் ஞானத்தை அளிக்க வல்லது. ஆயுதங்களின் வரிசையில் ஆயுதமல்லாத அழகான சங்கம் ஏன் வந்தது என்கிற கேள்வி எழ, குருக்ஷேத்ரத்தில் நமக்கு பதில் கிடைக்கிறது! மஹாபாரத யுத்த ஆரம்பத்தில் கண்ணன் பாஞ்சஜன்யத்தை ஊதினான். விளைவு?

'ஸ கோஷோ தார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்...' எந்த பாஞ்சஜன்யத்தின் ஒசை கேட்டு ருக்மிணி பிராட்டி மகிழ்ச்சி அடைந்தாளோ அதே பாஞ்ச ஜன்யத்தின் ஒலி த்ருதராஷ்ட்ராதிகளின் நெஞ்சைப் பிளந்தது. ஒரே ஒலியானது எம்பெருமானுக்கு அநுகூலராய் இருப்பவர்களுக்கு ஆனந்தம் கொடுக்கக் கூடியதாகவும், ப்ரதிகூலருக்கு துக்கம் விளைவிக்கக் கூடியதாகவும் விளங்குகின்றது. சக்ரம் ப்ரயோகம் செய்வதனால் ஸாதிக்கக் கூடியதை சங்கமானது

ஒலியினாலேயே ஸாதிக்கின்றது! ஆக சங்கமும் ஒரு ஆயுதமென்றே கொள்ளலாம் என்பது ஆன்றோர்களின் ஆய்வு.

எம்பெருமான் முதலில் பாஞ்சஜன்யத்தை ஊதியதும் அதிலிருந்து கிளம்பியது ஒலி மட்டுமே. அந்த ஒலியானது படிப்படியாக வார்த்தைகளாக **பகவத்கீதா ச்லோகங்களாகப் பரிணமித்தது!** உபநிஷத்துக்களெல்லாம் அவன் திருமுகத்தினின்று கீதையாக அவதரித்தது. அர்ஜுனனை வ்யாஜமாகக் கொண்டு செய்த இவ்வுபதேசங்களால் அனைவரும் நற்கதி அடைய வேண்டும் என்பதே கண்ணனின் அவதார நோக்கம்.

'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய...' என்று அவன் திருவடிகளில் சரணமடைவதே சிறந்த உபாயம் என்கிற சரணாகதி மார்கத்தையும் காட்டியருளினான்.

சிலம்பு தரும் சீரிய ஒலி

'த்வத் ப்ரேயஸ: ஸ்ரவணயோரம்ருதாயமாநாம்

துல்யாம் த்வதீய மணி நூபுர ஸிஞ்ஜிதாநாம்...'

கோதை பிராட்டியின் நாயகனான எம்பெருமானின் திருச் செவிகளுக்கு இவள் திருவடியில் அணிந்த ரத்நச் சிலம்பின் ஒலியே மிகவும் இனிமையாகவும் போக்யமாகவும் இருப்பதுடன் அதுவே **எம்பெருமானின் திருவுள்ளத்தைப் பூரிப்படைய வைக்கும் ஒலியாகவும் திகழ்கிறது** என்று ஸ்வாமி தேசிகன் கோதா ஸ்துதியில் தமக்கு நல் வாக்கை கொடுக்குமாறு ஆண்டாளின் திருவருளை ப்ரார்த்திக்கும் ச்லோகத்தில் அருளிச்செய்துள்ளார்.

ஸ்வாமி தேசிகனின் ப்ரார்த்தனை: ஸ்வாமி தாம் அருளிச்செய்த பாதுகா ஸஹஸ்ரம் என்னும் அற்புதமான க்ரந்தத்தில் நாத பத்ததியில், **'அந்தே மம ஆர்த்திம் சமயிஷ்யதஸ்தாம்...(409)'** என்கிற ச்லோகத்தில், தனது அந்திம காலத்தில், மிகவும் களைப்புடன் இருக்கும் வேளையில், அந்த சிரமத்தை போக்குவதற்காக எம்பெருமான் பாதுகையைச் சாற்றிக் கொண்டு எழுந்தருள வேண்டும் என்றும், அச்சமயத்தில் பாதுகையின் இனிமையான நாதத்தை தான் கேட்க வேண்டும் என்று பாதுகா தேவியிடம் ப்ரார்த்திக்கின்றார். தம்முடைய அந்திம காலத்தில் பெருமாளும், ஆசார்யர்களும் தமக்கு ஸேவை ஸாதிக்க வேண்டும் என்று ஸ்வாமி தேசிகன் ப்ரார்த்திப்பது இந்த ச்லோகத்தின் உட்கருத்து என்பது பூர்வாச்சார்யர்களின் துணிவு.

பகவத் அடியார்கள் கேட்க விரும்பும் ஒலி: திருச்சின்ன ஒலி: எம்பெருமான் அர்ச்சாமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் கோயில்களில் பயன்படுத்தப் படும் வாத்ய விசேஷங்களுள் ஒன்று அவன் எழுந்தருள்வதை அறிவிக்கும் திருச்சின்னம். இதிலிருந்து வெளிப்படும் த்வனியானது ஒரே மாதிரியானதாகவும், இனிமையானதாகவும் இருக்கும். இவ்வொலியைக் கேட்டதும் அடியார் குழாங்கள் விரைந்து சென்று அவனை ஸேவித்து மகிழ்வடைவர். இவ்வொலியானது திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் மற்றும் அவற்றின் பொருளாகவும் திகழ்பவனான பேரருளாளனை உணர்த்துவதாக அறுதியிட்டுக் கூறுகிறார் திருமலைமால் திருமணியாய் சிறக்க வந்த வள்ளல். நூலின் இறுதியில்:

'மறைத்தலையில் இசை எழுத்தில் வணங்கும் வாக்கின்...

திறத்தில் இயை திருச்சின்ன மாலை பத்தும்

செவிக்கினிதாம் சிற்றின்பம் இசையாதார்க்கே!'

இந்த திருச்சின்னமாலையின் பத்து பாசுரங்களும், சிற்றின்பத்தை விரும்பாமல் அந்தமில் பேரின்பத்தில் நோக்கமுடைய முமுக்ஷுக்களின் செவிகட்கு மிக இனிமையாகவும், ஆத்மாவிற்கு போக்யத்தை விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்பது ஸ்வாமி தேசிகனின் திருவாக்கின் ஒலியாகும்!

திருமணியின் அவதாரம்:

'பாத்ரபத மாஸகத விஷ்ணுவிமலர்க்ஷே...' என்கிற ஸப்ததி ரத்ந மாலிகா ச்லோகம் திருவேங்கடமுடையானின் திருமணியாழ்வாரே ஸ்வாமி தேசிகனாய் அவதரித்தார் என்பதைக் கூறுவதாக ஆன்றோர் கூறுவர். மணி என்றால் **ஓசை, அழகு, ரத்னம்** என்கிற மூவகைப் பொருள் படும். ஸ்வாமி தேசிகனுக்கு இம்மூன்றுமே பொருத்தம் உடையதாக உள்ளது ஆச்சர்யமே! ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து வெளிப்பட்ட திவ்யஸூக்திகளால் **ஓசையும்** அவற்றின் சொல் நயம், பொருள் நயம் **அழகு** மிக்கதாயும், தம் அவதார காலத்தில் ஞான, அநுஷ்டான, வைராக்ய **ரத்னமாகவும்** திகழ்ந்தவர் என்பது அனைவரும் அறிந்ததே.

நிறைவு:

திருவேங்கடமுடையானின் கண்டாம்சமாகப் போற்றப்படும் ஸ்வாமி தேசிகனின் அவதாரத்தின் பெருமைகளும் அவர் அருளிச்செய்த திவ்யஸூக்தி களும் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டும், மனத்தில் நிலைபெற்றும் இருக்குமாறு ப்ரார்த்தித்து அவருடைய க்ருபைக்கு பாத்ரர்களாவோமாக! ❊

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

மயிலாப்பூர், சென்னை - 4. ☎ 24953799

தர்சன நேரம்:

காலை 8.30 முதல் 10.30 வரை

மாலை 4.30 முதல் 6.30 வரை

இரவு 7.45 மணிக்கு சயனம்

ஸ்ரீ:

எம்பெருமானுக்கே நாம் ஆட்செய்வோம்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

பர, வ்யூஹ, விபவ மற்றும் அர்ச்சை என்னும் எம்பெருமானின் எல்லா நிலைகளிலும் நடப்பது, இருப்பது, நிற்பது, படுப்பது, பார்ப்பது, உடுப்பது, அணைப்பது என்ற திருமால் செய்யும் ஒவ்வொரு கார்யத்திலும் அப்பெருமான் வேண்டுமானபடி திருவனந்தாழ்வான் உருவெடுத்து அவனுக்கு உபகரணமாகிறான். இராமாவதாரத்தில் இளையபெருமாளாக திருவவதரித்து ஸ்ரீராமன் மற்றும் ஸீதா பிராட்டியின் சேர்த்தியில் எல்லையில்லா ஈடுபாடும், பக்தியும் கொண்டு, அவர்களிடத்தில் பலவிதமாக அடிமை செய்து அவர்களிடத்தில் தனக்குள்ள இன்றியமையாமையை வெளிப்படுத்தினான்.

யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்கோ நரகோ யஸ்த்வயா விநா |
இதி ஜாநந் பராம் ப்ரீதிம் கச்ச ராம மயா ஸஹ ||
- [அயோத்யாகாண்டம் 30-18]

''ராகவரே! உம்முடன் கூடியிருக்கும் இருப்பே எனக்கு ஸ்வர்கம்; உம்மைப் பிரிந்திருக்கும் இருப்பு நரகம் என்பதை அறிந்து என்னுடன் கூடவே மேலான ஆனந்தத்தை அடைவீராக.'' என்றும்

ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ |
முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யா விவோத்த்ருதௌ ||
[அயோத்யாகாண்டம் 53-34]

''ரகு குலத்துதித்தவனே! உன்னைப்பிரிந்த சீதையும் பிழைக்க மாட்டாள். உன்னைப்பிரிந்த நானும் பிழைக்கமாட்டேன். ஒருகால் நாங்களிருவரும் உயிர் வாழ்ந்தோமேயானால் ஜலத்திலிருந்து எடுக்கப்பட்ட மீன்கள் போலே ஒரு முஹூர்த்த நேரமே உயிர் வாழ்வோம்'' என்றும் எம்பெருமானைப் பிரிந்திருக்கும் இருப்பானது தமக்கு எவ்வளவு அஸஹ்யமாய் இருக்கும் என்று வெளிப்படுத்தினான்.

பஞ்சவடியில் பர்ணசாலை அமைக்கும்பொழுது, எம்பெருமான் ஸ்ரீராமன் கட்டளையிடுகிறான்:

ரமதே யத்ர வைதேஹீ த்வமஹம் சைவ லக்ஷ்மண |
தாத்ருசோ த்ருஷ்யதாம் தேச: ஸந்நிக்ருஷ்டஜலாசய: ||
[ஆரண்யகாண்டம் 15-4]

வநராமண்யகம் யத்ர ஜலராமண்யகம் ததா |
ஸந்நிக்ருஷ்டம் ச யத்ர ஸ்யாத்ஸமித்புஷ்பகுசோதகம் ||
[ஆரண்யகாண்டம் 15-5]

''லக்ஷ்மணா! நீர்நிலை அருகில் இருக்கக் கூடியதும், எந்த இடத்தில் சீதை மகிழ்ச்சியாக இருப்பாளோ, அதேபோல் நீயும் நானும் உகப்புடன் இருப்போமோ, அப்படிப்பட்டதான ஓர் இடத்தைத் தேடிக் கண்டுபிடி. அந்த இடம் மரங்கள் அடர்ந்து அழகாக இருக்க வேண்டும். நீர்வளம் உள்ளதாக இருக்க வேண்டும். அருகிலேயே ஸமித்து, மலர்கள், தர்ப்பை, நல்ல தீர்த்தம் கிடைக்கும்படியாக இருக்க வேண்டும்.'' என்றான். அதற்கு லக்ஷ்மணன்,

பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்திதே |
ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத ||
[ஆரண்யகாண்டம் 15-7]

''இராமா! நான் காலமெல்லாம் தங்கள் அடிமையாக இருப்பவன். அதனால் உனக்குப் பிடித்தமான இடத்தைத் தேர்ந்தெடு என்று தாங்கள் கூறுவது முறையல்ல. எந்த இடத்தில் தங்கள் மனம் ஈடுபடுகின்றதோ அதைச் சுட்டிக்காட்டி, இங்கே பர்ணசாலையைக் கட்டு என்று எனக்கு ஆணையிடுங்கள்'' என்று விண்ணப்பித்து தான் ஸ்வதந்த்ரன் அல்லன் என்றும் அவ்வாறு ஸ்வதந்த்ரமாக செய்யும் கைங்கர்யம் நிறம் பெறாது என்றும் ஸ்தாபிக்கிறார்.

ஸ்வாமி பொய்கைப்பிரான் திருவனந்தாழ்வானைப் போலவே எம்பெருமானுக்கு எல்லாக்காலங்களிலும் எல்லா விதமான அடிமைகளையும் செய்யும் பரமபாக்யம் வேணுமென்று திருவுள்ளங்கொண்டு அத்திருவனந்தாழ்வான் எம்பெருமானிடத்தில் செய்யுமடிமைகளை எடுத்தருளிச் செய்கிறார்.

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு.
[முதல்திருவந்தாதி - 53]

ஸ்வாமி நம்மாழ்வார் கைங்கர்யத்தில் தமக்கு உள்ள ஈடுபாட்டை ''க்ரியதாமிதி மாம் வத'' என்ற இளையபெருமாளின் திருவாக்குகொண்டு ஸ்தாபிக்கிறார்:

எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்று என்
மனக்கே வந்து இடைவீடின்றி மன்னி
தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே
எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே.
[திருவாய்மொழி 2-9-4]

எம்பெருமானே! நீ என் இதயத்திலே வந்து நிலையாக இருந்தருள வேண்டும். தங்களுக்கு நான் உரியவனாகும்படி என்னை அடிமை கொண்டு ஏற்றுக் கொள்வதே அடியேன் கண்ணனிடத்தில் விரும்பி வேண்டிக் கொள்கிற பயனாகும் என்று எம்பெருமானின் ஸர்வசேஷித்வத்தையும் அநந்யோபாயத்வத்தையும் நிர்தாரணம் பண்ணுகிறார். மேலும் உலகில் சந்தனம், புஷ்பம் முதலியனவற்றை சேதனன் எவ்வாறு தனக்காகக் கொள்கின்றானோ அதுபோலவே எம்பெருமானும் தனக்காகவே நம்மைக் கொள்கிறான். இதனை உணர்ந்து நாம் செய்யும் செயலெல்லாம் சிறந்த கைங்கர்யங்களாகின்றன என்று இளையபெருமாள் வெளிப்படுத்திய பாரதந்த்ரியத்தை

இப்பாசுரம் மூலம் தலைக்கட்டி எம்பெருமான் நம்மை அடிமைகொண்டு செய்துவிக்கும் கைங்கர்யமே சிறந்தது என்று ஸாதிக்கிறார் ஆழ்வார்.

ஸ்வாமி தேசிகன் பரமாத்மாவான ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே சேஷி, ஜீவாத்மாக்கள் அவனின் சேஷர்கள் (அடிமை) என்பதையும் ஜீவாத்மா, பரமாத்மாவிற்கு கைங்கர்யம் செய்வதே சேஷக்ருத்யம் என்றும் நமக்குக் காட்டுகிறார்.

யான் அறியும் சுடராகி நின்றேன் மற்றும் யாதும் அலேன்
வான் அமரும் திருமால் அடியேன் மற்றோர் பற்றும் இலேன்
தான் அமுதாம் அவன் தன் சரணே சரண் என்றடைந்தேன்
மானம் இலா அடிமைப் பணி பூண்ட மனத்தினனே.
[அம்ருதரஞ்சனி - 14]

இந்த ஸம்ஸார நிலத்திலிருக்கும் வரையில் சேற்றிலழுந்தின மாணிக்கம் ஒளி சுருங்கியிருக்குமா போலே ஆத்மாவுக்கும் ஜ்ஞானாநந்தாதிகள் விரிவின்றிச் சுருங்கியிருக்க நேருமே; அந்தச் சுருங்குதல் தொலைந்து ஸ்வரூப விகாஸத்தைப் பெற்று அந்த ஸ்வரூபத்திற்குப் பாங்காய் எப்படி இருக்க வேண்டும்?

1. இந்த்ரியங்களையும் அவயவங்களையும் எம்பெருமானை அநுபவிப்பதற்கு மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

ஜிஹ்வே கீர்தய கேசவம் முரரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம்
பாணித்வந்த்வ ஸமர்ச்சயாச்யுதகதாச் ச்ரோத்ரத்வய த்வம் ச்ருணு |
க்ருஷ்ணம் லோகய லோசன த்வய ஹரே கச்சாங்க்ரியுக்மாலயம்
ஜிக்ர க்ராண முகுந்தபாதது ளஸீம் மூர்த்தந் நமாதோக்ஷஜம் ||
[முகுந்தமாலை - 16]

''வாராய் நாக்கே! கேசவனை ஸ்தோத்ரம் செய். வாராய் நெஞ்சே! கண்ணபிரானைப் பற்று. இரண்டு கைகளே! திருமாலை ஆராதியுங்கள்; இரண்டு காதுகளே! எம்பெருமானுடைய சரித்ரத்தைக் கேளுங்கள்; இரண்டு கண்களே! கண்ணபிரானை ஸேவியுங்கள்; இரண்டு கால்களே! எம்பெருமானுடைய ஸந்நிதியை நோக்கிப் போங்கள்; வாராய் மூக்கே! ஸ்ரீகிருஷ்ணனது திருவடிகளிற் சாற்றிய திருத்துழாயை அநுபவி; வாராய் தலையே! எம்பெருமானை வணங்கு'' என்று ஸ்வாமி குலசேகராழ்வார் நியமிப்பது போல நாக்கு, நெஞ்சு, கை, காது, கண், கால், மூக்கு, தலை என்னும் இந்திரியங்களையும் அவயவங்களையும் விளித்து நீங்கள் உங்களுடைய சக்தியையெல்லாம் பகவத் விஷயத்திலேயே உபயோகப்படுத்துங்கள்.

2. சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்ட கர்மங்களையும் மற்ற பயன்களைத் தரவல்ல காம்ய கர்மங்களையும் செய்யாதிருக்க வேண்டும்.

த்வச்சேஷத்வே ஸ்திரதியம் த்வத்ப்ராப்த்யேகப்ரயோஜநம்
நிஷித்தகாம்யரஹிதம் குரு மாம் நித்யகிங்கரம்
[ந்யாஸதசகம் - 5]

எம்பெருமானே! அடியேன் உன்னைச் சரண மடைந்தவன். உனக்கு நான் அடியேன் என்ற எண்ணம் அடியேனுக்கு இருக்கின்றது. இவ்வெண்ணம் எந்நாளும் மாறாது உறுதியாயிருக்கும். உன்னை அநுபவிப்பதன்றி வேறு பயனை அடியேன் நாடாதிருக்கின்றேன். இத்தகைய அடியேன் சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்ட கர்மங்களையும் மற்ற பயன்களைத் தரவல்ல காம்ய கர்மங்களையும் செய்யாதிருக்கவேண்டும். இந்தச் சரீரத்துடன் இப்பொழுது செய்யும் கைங்கர்யம் எக்காலத்தும் தடையின்றி நடக்கவேண்டும். இவையெல்லாம் அடியேன் பெறுமாறு நீயே அருள்புரிய வேண்டும் என்று விண்ணப்பிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

3. எம்பெருமான் சிரமமின்றி எளிதாகவே ஆராதிக்க உரியவன் என்று உணர்ந்திருத்தல் வேண்டும்

பரிவதில் ஈசனைப் பாடி விரிவது மேவல் உறுவீர்
பிரிவகையின்றி நன்னீர்தூய் புரிவதுவும் புகை பூவே
[திருவாய்மொழி 1-6-1]

எம்பெருமான் சீலனாயிருப்பினும் அவனை ஆராதிக்கப் புகுமிடத்தில் எந்தவொரு குறையுமில்லாமல் ஆராதிக்க வேண்டுமே! நாமோ நீசர்கள்; நீசமான உபகரணங்களைக் கொண்டு அவனை எவ்வாறு ஆச்ரயித்துத் தலைகட்டுவது என்று அவனை விட்டு விலகப் பார்த்தாலும் எம்பெருமான் ஆராதனைக்கெளியனாகி நாம் இட்டதுகொண்டு த்ருப்தியடைகிறான். அவனது திருவாராதனத்திற்குத் தீர்த்தம் ஒன்றே போதுமானது. அந்த தீர்த்தமும் ஏலம் முதலான வாஸனாத்ருவ்யங்களோ, துளஸீ முதலான சுத்த வஸ்துக்களோ சேர்ந்ததாயிருக்க வேண்டுமென்பதுமில்லை; புஷ்பம் எதுவாகயிருப்பினும் குற்றமில்லை; ஸமர்ப்பிக்கும் முறை தவறாது ஸமர்ப்பிக்க வேண்டுமென்பது மில்லை. இதற்கு மேலும் எதையாவது ஸமர்ப்பிக்க முடியுமென்னில் சாதாரண தூபம் ஸமர்ப்பியுங்கோள். எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கிறோம் என்கிற சுத்த பாவமும், அவனிடத்தில் பெருங்காதலும், பக்தியுமே ப்ரதானம். அவாப்தஸமஸ்தகாமன் திறத்திலே நாம் சில பொருள்களை ஸமர்பிப்பது நமது ஸ்வரூபம் நிறம்பெறுதற்கேயன்றி அவனை நிரப்புவதற்கன்று என்று அவனின் ஸ்வாராதத்வத்தை தலைக்கட்டுகிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.

மேலும் தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும் அநந்யகதித்வத்தையும் முன்னிட்டு திருவேங்கட முடையான் திருவடிகளே உபாயம் என்று

அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்பா...
புகலொன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.
[திருவாய்மொழி 6-10-10]

அவனிடம் சரணம் புகுந்து அத்திருவேங்கட முடையானுக்கு ''இடைவீடின்றி'' எல்லாக் காலங் களிலும் எல்லாவடிமைகளும் செய்யப் பெற வேணு மென்பதையே உபேயமாக மநோரதிக்கிறார் ஆழ்வார்.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி ,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்...
[திருவாய்மொழி 3-3-1]

ஆழ்வார் காட்டிய வழியில் நாமும் சென்று அவனுக்கு வழுவிலா அடிமை செய்து நம் ஸ்வருபத்திற்குப் பாங்காயிருப்போம்.

17. Sri Dehaleesa Sthuthi

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The birth place of Divya Prabandham and the abode of a sky-scraping Lord raising the 'wrong' leg and flaunting His 'dexterity' (with the Chakra and the Sankha interchanged). The setting could not have been more inspiring to Swami Desika. The result is Sri Dehaleesa Sthuthi, a delectable hymn of 28 Slokas on Lord Thrivikrama, also called Dehaleesa, of ThirukKovalur. 'Dehalee' refers to a vestibule or verandah (இடைகழி, now known as ரேழி) and 'Eesa' means god.

கோவலூர் மன்னும் இடைகழி எம்மாயவனை
(பெரிய திருமடல் - 66)

Thirumangai Azhwar, in his Periya Thirumadal, describes Him as "the wonder Lord who appeared in a vestibule in Kovalur."

ThirukKovalur is referred to in the hymn as 'Gopa Pura' and the river Pennar on whose banks it is located is mentioned as 'Panna'. The town is situated on the railway line between the Katpadi and Villupuram junctions and the temple, 3 kilometres from the station.

It is essential to learn/recite this Sthothra keeping a few anecdotes in mind. As opposed to the normal posture in which the Lord holds the Chakra in His right and the Conch in His left hand, the Emperuman here carries the Conch in His right and the Disc in His left, in deference to the wish of Sage Mrukandu. The legend goes like this: The sage observed a severe penance seeking direct vision of Lord Vishnu and a pleased Lord appeared before him and offered a boon. The sage responded by asking for the unique posture, which was granted. Not only that; Lord Thrivikrama here raises His right foot to measure the sky instead of the left.

ThirukKovalur is one of the five Krishnaaranya Kshethras, the others being ThirukKanna Puram,

ThirukKanna Mangai, ThirukKannangudi and Aatrankarai (Kapisthalam). The Uthsavar here is known as Aayanaar or Kovalan/Gopalan.

Thus declares Kaliyan in his Periya Thirumozhi: "Here, at ThirukKovalur, stands the Lord who protected the cows in Gokulam by holding aloft Mount Govardhana against hailstorm and the one who tamed seven raging bulls,"

குடையா வரையால் நிரைமுன் காத்த பெருமான் மருவாத

விடை தான் ஏழும் வென்றான் கோவல் நின்றான். (பெரிய திருமொழி - 6-10-5)

Swami Desika, in this Sthothra, frequently refers to the famous incident involving the three 'Mudhal Azhwargal' and the origination of the Divya Prabandham. According to the tradition, it was Poigai Azhwar who first went to ThirukKovalur to worship the Lord on what turned out to be a rainy night. So he took shelter

in the verandah of a small house and, thinking that he would worship the Lord on the morrow, he lay there. After some time, Bhuthath-Azhwar, with the rain intensifying, reached the same place and, since there was just enough space for two to sit, they both sat there. Then entered Pey Azhwar, fully drenched, and the three could barely stand there. Amidst thunder and lightning and under pitch-dark condition, they felt that they were being pressed hard against as someone else was apparently trying to squeeze himself in.

They understood through their insight that the 'imposing' fourth person was none other than the Lord Himself. Their joy knew no bounds and they burst into rapturous verses on His greatness.

First, Poigai Azhwar sang his 'Mudhal Thiruvantaadhi', with the Sun as the lamp and then Boothath-Azhwar recited his 'Irandaam Thiruvantaadhi', with knowledge as the lamp, in quest of a vision of the Lord. The darkness having been wiped out completely, Pey Azhwar had a wonderful vision of the Lord and His consort on His frame, launched into his 'Moonraam Thiruvantaadhi', starting with "ThirukKanden, Ponmeni Kanden".

The Sthothra starts with the author invoking the Lord thus. "May that Supreme Ruler of Gopa Pura be my saviour -- He, who scaled all the worlds and conquered them, He, who is the root cause of the entire universe, and He, who bestows on His devotees all their wishes."

The hymn is replete with references to various anecdotes as also narrative nuances. Some of the highlights are enlisted below with the Sloka number in parentheses:

- Interchanging of the Disc and the Conch by the Lord (5);

The Lord of Thirukkovalur

- Mudhal Azhwargal's vision of the Lord (6);
- Vamana 'gianting' into Thrivikrama (8);
- Miracle of fitting His massive frame into the small place (vestibule) already sheltering the Azhwars (9);
- Fame attained by Siva and Brahma, courtesy Thrivikrama (12);
- Emergence of the three Anthaadhis (16);
- The Lord leading the three Azhwars to Sri Vaikunta (17);
- His benevolence to those who bear the mark of His Chakra and Sankha, by subjecting themselves to Pancha Samskara (27).

From the signature part in the final Sloka meant for Phala Sruti, it is evident that this is another Sthothra named by Swami Desika himself. He avers that the hymn, considering the nature of its addressee, is totally devoid of falsehood and those who recite this will be blessed with all the desired fruits.

To be continued…

With Best Compliments from:

Sevilimedu Raghavan,
Door No. 8, Plot No. 59,
Union Carbide Colony,
4th Street, Ullagaram,
Chennai 600 091.

&

T.C. Rangarajan & T.C. Srinath,
New No. 42, 4th Trust Cross Street,
Mandaveli, Chennai 600 028.
(In memory of their grandfather Villivalam Sri Rajagopalan)

SVDD thanks Sri Sevilimedu Raghavan,
Sri T.C. Rangarajan & Sri T.C. Srinath
for sponsoring this month's issue of Desika Sandesam

Sri Venkatesa Theertham

– all set to open

Sri Venkatesa Theertham, a project for setting up facilities for performing the rituals (upto the 12th day) was taken up by the Trustees to fulfil the long-felt wish of the Asthikas in and around Mylapore.

After overcoming several challenges, planning permit for the facility was obtained in July 2019. The foundation-laying ceremony was performed in September 2019, and the construction began in all earnestness in the month of November and was progressing well. However, the onslaught of COVID-19 put a dampener on the construction and it was restored with the gradual lifting of the lockdown.

The project implementation picked up pace and has now been completed, with the facility ready to be opened to the public in the month of Thai.

From the beginning, the project has received unstinted support from the public, the members of all organisations affiliated to the Devasthanam and the donors. The project consists of six Individual units complete with all facilities for carrying out the rituals. For the benefit of those who are orthodoxy-inclined, a well has been constructed and there is a generator in place for power back-up.

The cost of the project is ₹2.35 crores which has been fully funded by donors (big corporates, medium business and individuals). Our sincere, heart-felt thanks to each one of them.

The following is the list of donors (in the alphabetical order):

- ABI Sowtech (India) Limited
- Adhiseshan G
- Brakes India Limited
- India Motor parts & Accessories Limited
- India Nippon Electricals Limited
- Lucas TVS Limited
- Madras Auto Service Limited
- Mugunthan R
- Royal Sundaram Alliance Insurance
- Sudha Gopal
- Sundaram Asset Management Ltd.
- Sundaram Finance Limited
- Sundaram Home Finance Ltd.
- Sundaram Motors Limited
- Turbo Energy Limited &
- Others

The back wrapper has an image of the frontage of the building.

For enquiries and bookings, please contact **044-4322 9401.**

– Trustees

Sri Venkatesa Theertham (Write-up on the previous page)